1971 டிசம்பர் 18]

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

கும்முடிப்பூண்டியில் வட்டத்தலைமை மருத்துவமனை

* 560 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கும்முடிப்பூண்டியில் வட்ட அளவு தலைமை மருத்துவமனை (Taluk Head-quarters Hospital) கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஒரு துணை வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இல்லையென்பதாலும், ஒரு வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இருப்பதாலும், எப்படியாவது நெருக்கடி நிலை தீர்ந்த பிறகாவது ஒரு தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையை அங்கே அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதில் இரண்டு தவருன கருத்துக்கள் இருக்கின்றன. சில தாலுக்கா மருத்து மனைகளைவிட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழகாகக் கட்டப்பட்டிருந்தாலும், அங்கும் ஒரே டாக்டர்தான். இங்கும் ஒரே டாக்டர்தான். ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு நல்ல மருத்துவ மனை அல்ல என்று கருதக்கூடாது. இரண்டாவது, கும்முடிப்பூண்டி, ஒரு பிர்க்காத் தலைநகரமே தவிர, தாலுக்கா தலைநகரம் அல்ல. பல்வேறு பிர்க்காத் தலைநகரங்களில் என்ன நிலைமை இருக்கிறதோ அந்த நிலைமைத்தான் அங்கும் இருக்கிறது.

Assistance by Veterinary Department personnel

* 561 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Race Course requisitions the services of the personnel of the Department of Veterinary Services of the State Government during the Race season ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) பேரவை முன்னர் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@- 117-119-ம் பக்கங்களில் ருதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.